SURESH' IAS ACADEMY




# 17.06.2026 செய்திகள்

## சங்கீத நாடக அகாடமி விருதுக்கு நடிகர் வாகை சந்திரசேகர் உள்ளிட்டோர் தேர்வு

- இசை, நடனம் மற்றும் நாடகத்துக்கான தேசிய அகாடமியாக விளங்குவது, சங்கீத நாடக அகாடமி. இது இந்தியாவின் கலைகளுக்கான மிக உயர்ந்த தேசிய அமைப்பாகும். 1953-ல் நிறுவப்பட்டு மத்திய அரசின் கலாச்சார அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது. இதில் 2024-25-ம் ஆண்டுக்கான சங்கீத நாடக அகாடமி விருதுக்குரியவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அகாடமி ரத்னா விருதுக்கு 7 பேர் தேர்வாகி உள்ளனர்.
- இதில் தமிழரான பரதநாட்டியக் கலைஞர் சுதர்னி ரகுபதியும் ஒருவர் ஆவார். இசைக் கலைஞர்களுக்கான 12 விருதுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த என்.விஜய் சிவா, ஏ.எஸ்.கிருஷ்ணன் ஆகியோர் தேர்வாகினர்.
- நடனக் கலைக்கான 12 விருதாளர்களில் பரதநாட்டியத்திற்காக தமிழர்களான ரோஜா கண்ணன், கலாஷேத்ராவின் கே.ஹரிபிரசாத் ஆகியோரும் குச்சுப்புடிக்காக நாகஜோதி மற்றும் சீதா நாகஜோதியும் இடம்பெற்றுள்ளனர்.
- டெல்லியைச் சேர்ந்த இந்த தம்பதிகளில் நாகஜோதி, டெல்லி தமிழ் சங்கம், டெல்லி கல்விக் கழகத்தின் முன்னாள் துணைத் தலைவர் ஆவார்.
- நாடக நடிகர்களுக்கான விருது பெறும் 10 பேரில் தமிழ் நடிகர் வாகை சந்திரசேகரும் உள்ளார். நாட்டுப்புறக் கலைகளுக்கான 13 விருதாளர்களில் ஒருவராக புதுச்சேரியின் கே.முருகன் உள்ளார்.
- மேலும், அனைத்து துறைகளின் விருதுக்கு 5 கலைஞர்கள் தேர்வாகி உள்ளனர். பெல்லோஷிப்களுக்காக 40 பேர் தேர்வாகி உள்ளனர். இவர்கள் ரூ.3 லட்சம் ரொக்கம் அளித்து கவுரவிக்கப்பட உள்ளனர்.
- சங்கீத நாடக அகாடமி உஸ்தாத் பிஸ்மில்லாஹ் கான் யுவபுரஸ்கார் விருதுக்கு 106 இளம் கலைஞர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். இந்த விருதுகள் குடியரசுத்தலைவரால் வழங்கப்பட உள்ளன.

SURESH

## மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டம் : 23 மாநிலங்களில் நிறைவு

- முதல்கட்டமாக வீடுகள் பட்டியலிடுதல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்புப் பணி நடப்பாண்டு ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் 3 வரை நடைபெறும் என்று தெரிவித்தது.
- பொதுமக்களிடம் கேட்கப்படும் 33 கேள்விகளின் பட்டியலும் வெளியிடப்பட்டது. வீட்டில் உள்ள அடிப்படை வசதிகள், வீட்டுத் தலைவரின் பெயர், பாலினம் உள்ளிட்ட விவரங்கள், வீட்டின் உரிமை உள்ளிட்டவை அடங்கும்.
- முதல் முறையாக வலைதளத்தில் பொதுமக்கள் தாமாகவே தகவல்களைப் பூர்த்தி செய்யும் வசதியும் தொடங்கப்பட்டது. அதன்படி, சுயபதிவுக்கு 15 நாள்கள் காலஅவகாசம் வழங்கப்பட்டு, பின்னர் களப் பணியாளர்கள் மூலம் வீடு வீடாகச் சென்று கணக்கிடுதல் மற்றும் சரிபார்த்தல் பணி (ஒரு மாதம்) மேற்கொள்ளப்படுகிறது.
- கர்நாடகம், ஒடிஸா, கோவா, சிக்கிம் உள்ளிட்ட மாநிலங்களில் கடந்த ஏப்.1-ஆம் தேதி முதல் கட்டப் பணி தொடங்கப்பட்டது. இதுவரை 23 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இந்தப் பணி நிறைவடைந்துள்ளது.
- உத்தர பிரதேசம், குஜராத், ஜம்மு-காஷ்மீர், லடாக் புதுச்சேரியில் களப்பணி நடைபெற்று வருகிறது. கேரளம், நாகலாந்தில் 15 நாள் சுயபதிவு நடைமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழகத்தில் சுயபதிவு காலகட்டம் ஜூலை 17-ஆம் தேதி தொடங்கவுள்ளது.

- ரூ.11,718 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் தற்போதைய மக்கள்தொகை கணக்கெடுப்பு, நாட்டின் சுதந்திரத்துக்குப் பிறகான 8-ஆவது கணக்கெடுப்பாகும். முதல்கட்டமாக வீடுகள் பட்டியலிடுதல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்புக்குப் பிறகு இரண்டாம் கட்டமாக மக்கள் தொகை கணக்கெடுக்கப்படும். அடுத்த ஆண்டு பிப்ரவரி வரையிலான இந்தப் பணியில் ஒவ்வொரு நபரின் சமூக பொருளாதார, ஜாதி ரீதியிலான விவரங்கள் சேகரிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'எல்நினோ' பிரச்சனையால் 10 மாநிலங்கள் பாதிக்கும் அபாயம்

- 'எல்நினோ' பிரச்சனை, உலகமெங்கும் விஸ்வரூபம் எடுக்கிறது. இதனால் பசிபிக் பெருங்கடலில் மத்திய மற்றும் கிழக்கு பகுதிகளில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை இயல்பை விட அதிகமாக இருக்கும்.இதனால் வெப்பம் அதிகரிக்கும், மழை குறையும், வறட்சி ஏற்படும், பஞ்சம் வரலாம் என்று கணிக்கப்படுகிறது.
- ஜூலைக்குள் மேற்கு இந்தியப் பெருங்கடல் (ஆப்பிரிக்கா அருகில்) வழக்கத்தை விட வெப்பமாகவும், கிழக்கு இந்தியப் பெருங்கடல் (இந்தோனேசியா அருகில்) குளிர்ச்சியாகவும் இருக்கும். இது இந்தியாவில் நல்ல பருவமழைக்கு வழிவகுக்கும் என்றும் கூறப்படுகிறது.

» அமைச்சர் ஆலோசனை

- இந்நிலையில், மத்திய விவசாய அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான், டில்லியில் நேற்று 'எல்நினோ' பாதிப்பு தொடர்பாக ஒரு உயர்மட்டக் கூட்டத்தைக் கூட்டி விவாதித்தார். இந்தக் கூட்டத்தில் அவர் பேசியதின் முக்கிய அம்சங்கள் :
- எல் நினோவால், நாட்டின் 9-10 மாநிலங்கள் கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. காரீப் பருவ விவசாயத்தைக் பாதுகாக்கும் பொருட்டு, பாதிப்புக்குள்ளாகும் மாவட்டங்களை அடையாளம் கண்டு, விரிவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாநிலங்கள் எடுக்க வேண்டும்.
- நடப்பு பருவமழைக்காலத்தில் குறைந்த மழைப்பொழிவு அல்லது சீரற்ற மழைப்பரவல் ஏற்பட வாய்ப்புள்ள மாவட்டங்களுக்கு முன்கூட்டியே, அவசரகாலத் திட்டமிடலை உறுதி செய்ய வேண்டும். அங்கு பருத்தி, பயறு வகை சாகுபடிகளை அதிகரிக்க வேண்டும். மழை பற்றாக்குறையால் பாதிக்கப்படும் மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டு, மாநில அரசுகளுடன் இணைந்து பயிர் வாரியான அவசரகாலத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
- இதன் மூலம், வானிலை தொடர்பான ஏதேனும் சவால் ஏற்படும் பட்சத்தில், விவசாயிகளுக்கு உடனடியாக மாற்று வழிகள், ஆலோசனைகள் மற்றும் உதவிகளை வழங்க முடியும். வேளாண் பல்கலைக்கழகங்கள், ஐசிஏஆர் நிறுவனங்கள் மற்றும் மாநில வேளாண்துறைகளுக்கு இடையே, வலுவான ஒருங்கிணைப்பு தேவை. இவ்வாறு அவர் பேசினார்.

## 2024-25ல் வருவாய் உபரியை பதிவு செய்த 13 மாநிலங்கள்

- சி.ஏ.ஜி., எனப்படும் நாட்டின் தலைமை கணக்கு தணிக்கையாளர் கே.சஞ்சய் மூர்த்தி, 2024-25-ம் நிதியாண்டுக்கான மாநிலங்களின் நிதிநிலை அறிக்கையை வெளியிட்டார். 2024-25ல் 18 மாநிலங்கள் வருவாய் உபரியையும், மூன்று மாநிலங்கள் வருவாய் பற்றாக்குறையையும், ஏழு மாநிலங்கள் பூஜ்ய வருவாய் பற்றாக்குறையையும் இலக்காக வைத்தி ருந்தன. இறுதியில், 13 மாநிலங்கள் வருவாய் உபரியையும், 15 மாநிலங்கள் பற்றாக்குறையையும் பதிவு செய்தன.
- கோவா, ஜார்க்கண்ட், திரிபுரா, உத்தர பிரதேசம், குஜராத் உள்ளிட்ட, 13 மாநிலங்கள் வருவாய் உபரியை பதிவு செய்தன. பஞ்சாப், ராஜஸ்தான், தமிழகம் உள்ளிட்ட, 15 மாநிலங்கள் வருவாய் பற்றாக்குறையை சந்தித்தன. 15வது நிதிக்குழு நிர்ணயித்த, 3 சதவீத மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி இலக்கை விட, 18 மாநிலங்கள் அதிக நிதி பற்றாக்குறையை கொண்டுள்ளன.
- ஒட்டுமொத்த மாநிலங்களின் நிகர வருவாய் பற்றாக்குறை, 2.19 லட்சம் கோடி ரூபாய். 28 மாநிலங்களின் மொத்த வருவாய் வரவான 40.52 லட்சம் கோடி ரூபாயில், 50 சதவீதம் மாநிலங்களின் சொந்த வரி வருவாய் மூலம் கிடைத்துள்ளது.
- இதில், மாநில ஜி.எஸ்.டி., மட்டும் 43 சதவீதத்திற்கு மேல் பங்களித்துள்ளது. மாநிலங்களின் மொத்த பட்ஜெட் செலவு, 51.20 லட்சம் கோடி ரூபாய். இதில் சம்பளம், ஓய்வூதியம், வட்டி செலுத்துதல் போன்ற கட்டாய செலவுகள் மட்டும், 43 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளன. இந்த செலவு நாகாலாந்தில் 74 சதவீதம் என்ற அளவில் மிக அதிகமாகவும், மஹாராஷ்டிராவில் 29 சதவீதம் உள்ள அளவில் குறைவாகவும் உள்ளது.